Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Deposition of witness for | |
| Name | Beethamparam |
| Father's Name | Pachaiyappan |
| Village | Kethandapatti Jeeva Nagar |
| Taluk | Natrampalli |
| Caste | Vanniyar |
| Calling | National High Way Duty |
| Religion | Hindu |
| Age | 45 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05.02.2025

MCOP.57/2021 PW1 Name:**பீதாம்பரம்**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

மனுவில் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், பதிவு சான்று நகல் ம.சா.ஆ.2 ஆகவும், காப்பீட்டு பாலிசி நகல் ம.சா.ஆ.3 ஆகவும், ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.4 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.5 ஆகவும், ஆட்டோ பதிவு சான்று நகல் ம.சா.ஆ.6 ஆகவும், ஆட்டோ ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.7 ஆகவும், ஆட்டோவின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் ம.சா.ஆ.8 ஆகவும், விபத்து பதிவேட்டு நகல் ம.சா.ஆ.9 ஆகவும், மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு நகல் ம.சா.ஆ.10 ஆகவும், மருத்துவமனை பில்கள் ம.சா.ஆ.11 ஆகவும், ஆம்புலன்ஸ் வாடகை ரசீதுகள் ம.சா.ஆ.12 ஆகவும், ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.13 ஆகவும், பான்கார்டு நகல் ம.சா.ஆ.14 ஆகவும், வங்கி கணக்கு புத்தக நகல் ம.சா.ஆ.15 ஆகவும், குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன். மனுப்படி

தீர்ப்பாக வேண்டுகிறேன்.

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

ஆட்டோவில் நான் புத்துகோயிலிருந்து நாட்றம்பள்ளி நோக்கி சர்வீஸ் சாலையில் சென்று கொண்டிருந்தேன். சர்வீஸ் ரோட்டின் இடது ஓரமாக லாரி நிறுத்தபட்டிருந்தது என்றால் ரோட்டின் நடுவில் தான் லாரி நின்றிருந்தது. நின்றுகொண்டிந்த லாரியின் பின்னால் ஆட்டோ மோதிதான் விபத்து ஏற்பட்டது. ஆட்டோ வேகமாக சென்று மோதியதால் ஆட்டோவின் முன்பக்கம் சேதாரம் ஏற்பட்டு எனக்கும் அடிப்பட்டது. ஆட்டோ ஓட்டுநர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்டுள்ளது. இறுதி அறிக்கையும் அவர் பெயரில் தான் தாக்கல் செய்யபட்டுள்ளது. லாரி டிரைவர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக ஆட்டோ ஓட்டுநர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. முதலில் நான் அரசு மருத்துவமனையிலும் பின்னர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன். மொத்தம் 4 மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துள்ளேன். சென்னை மருத்துவமனை ஆவணம் மட்டும்தான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மற்ற மருத்துவமனை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்ததற்கான மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு ஆவணங்கள் இல்லாததால் மருத்துவ பில்கள் கணக்கில் எடுத்துகொள்ளமுடியாது என்றால் சரியல்ல. 28.10.2020ல் நான் உள்நோயாளியாக அனுமதிக்கபட்டதாக மசாஅ10 ஆவணத்தில் உள்ளது. அதில் 4 மாதங்கள் பழமையான கால் எழும்பு முறிவு சிகிச்சை எடுத்ததாக கூறப்பட்டுள்ளது. 23.10.2020ல் விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு முன் ஏற்பட்ட எலும்பு முறிவுக்கு தான் சிகிச்சை எடுத்தேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு முன் எனக்கு எலும்பு முறிவு

எதுவும் ஏற்படவில்லை சென்னை அரசு மருத்துவமனை விபத்திற்கு முன் ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சை எடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 , 3 எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸ் ரசீது வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரிடம் மட்டும் தான் நான் இழப்பீடு கேட்கமுடியும் என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 05/02/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.02.05 17:17:26 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.